2015 ஆகஸ்ட் 31]

அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

176—

திருக்கோயில் பணியாளர்களுக்கான குடியிருப்புகள்

***54781—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தரும் கொள்கை முடிவு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு கட்டப்பட்டது. சம்பந்தர், அப்பர், சுந்தரர், அருணகிரிநாதர் போன்ற அருளாளர்கள் தேவாரம், திருப்புகழ் பாடிய, திருத்தலம் இது, உதவி ஆணையர் அந்தஸ்திலுள்ள அலுவலரால் நிருவகிக்கப்படும் சிறப்பு வாய்ந்த திருத்தலம். நவக்கிரகத் தலங்களில் ஒன்றான இத்திருக்கோயிலில், ராகு காலத்தில் ராகு பகவானுக்கு நடைபெறும் சிறப்பு அபிஷேக ஆராதனை நேரத்தில்

வணங்குவதற்கு இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினந்தோறும் வந்தவண்ணம் உள்ளனர். இப்படிச் சிறப்பு வாய்ந்த இத்திருக்கோயிலில் எழுத்தர்கள், அலுவலக உதவியாளர்கள் என அலுவலகப் பணியாளர்களாகவும், அர்ச்சகர்கள், பரிசாரகர்கள், நாதஸ்வர-மேள வித்வான்கள், திருவடி இரவுக் காவலர்கள் என ஆலயப் பணியாளர்களாக சுமார் 50 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் திருக்கோயில் பணியாளர்களுக்கு, அந்தந்தத் திருக்கோயில்களின் நிதி வசதி, நில வசதி, பணியாளர்களின் கோரிக்கை மற்றும் தேவை ஆகியவற்றைப் பொறுத்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு குடியிருப்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் செய்து தந்து கொண்டிருக்கிறது. திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் மற்றும் உபகோயில்களைப் பொறுத்தவரை நிரந்தரப் பணியாளர்கள் 28 நபர்களும் கும்பகோணம் நகராட்சி, திருநாகேஸ்வரம் பேரூராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் திருக்கோயிலுக்கு அருகிலேயே சொந்த வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வசித்து வருகின்றனர். எனவே, இத்திருக்கோயிலின் பணியாளர்கள் எவரும் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டுமென்று இதுவரை கோரிக்கை ஏதும் வைக்கவில்லை. ஆதலால், தற்பொழுது பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டிய அவசியம் எழவில்லை. இருந்தபோதிலும், பணியாளர்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெறுமாயின், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்

2015 ஆகஸ்ட் 31]
திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் பணியாளர்களுக்கு உதவிடும்வகையில், அரசின் சார்பில் சிறப்பு நிதியுதவி வழங்கி குடியிருப்புகள் கட்டித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இத்திருக்கோயிலின் அருகிலுள்ள, தென்னகத் திருப்பதி என்று அழைக்கப்படும் 108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான, ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட, நம்மாழ்வார் போன்றவர்களால் அதிகமாக பாடப்பட்ட, அருள்மிகு உப்பிலியப்பன் திருக்கோயில் பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இரண்டு திருக்கோயில்களிலும் பல ஆண்டுகளாகத் தினப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வருபவர்களைப் பணி நிரந்தரம் செய்திடவும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இப்பகுதியிலுள்ள அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், அருள்மிகு உப்பிலியப்பன் திருக்கோயில், அருள்மிகு ப்ரித்யங்கரா தேவி திருக்கோயில்களுக்குப் பக்தர்களும், V.V.I.P. அந்தஸ்துள்ள—முக்கியப் பிரமுகர்களும் வந்து செல்கின்ற காரணத்தினால், பக்தர்கள் தங்குவதற்கு தங்கும் விடுதி ஒன்று கட்டித் தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

22—2—2016—ல் நடைபெறவுள்ள கும்பகோணம், மகாமகம் திருவிழாவிற்கான பணிகளை விரைவாகச் செய்திட கேட்டுக்கொள்கிறேன். அனைத்துக் கோயில்களுக்கும் குடமுழுக்கு செய்வதற்கு உறுதியளிக்கப்பட்டு அரசின் மூலமாக ரூபாய் 12½ கோடி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை எத்தனை கோயில்களுக்குக் குடமுழுக்கு செய்யப்பட்டிருக்கிறது என்பதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியானது பணியாளர்களுக்கு தங்குமிடம் கட்டிக் கொடுப்பது பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை, பல்வேறு கேள்விகளை

இங்கே வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மகாமகம் விழா வெகு சிறப்பாக நடைபெறுவதற்குப் பல்வேறு பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை அவைக்குப் பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான ஏற்பாடுகள் விரிவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திருநாகேஸ்வரம் திருக்கோயில் மற்றும் உப்பிலியப்பன் திருக்கோயிலுக்கு வருகிற பக்தர்களுக்கு தங்கும் வசதி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். ஏற்கெனவே இந்த வினா அவையில் எழுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும், அனைத்து இடங்களிலும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் வைத்தார்கள். அது பற்றிச் சொல்கிறபோது, திருக்கோயில்களில் ஐந்து ஆண்டுகளுக்குமேல் பணிபுரிந்த 8,184 தினக் கூலி மற்றும் தொகுப்பு ஊதியப் பணியாளர்களின் பணியை சம்பள ஏற்றமுறையில் வரன்முறை செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதனையும் இந்த அவைக்கு நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 518 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தில் பணியாற்றுகிற 820 தற்காலிகப் பணியாளர்களின் பணியை சம்பள ஏற்றமுறையில் வரன்முறை செய்து காலப்பெட்டகம், கருணை தெய்வம், காவேரித் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதனையும் (மேசையைத் தட்டும் ஒலி) அவைக்குப் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.